## கேரள அரசின் எக்கோ டூரிஸம்...

# சீர்குலையுமா சிறுவாணி?

"ஏற்கெனவே முல்லை பெரியார் விவகாரத்துல நமக்குக் கிடைச்ச மூக்குடைப்பு போதாதா... அடுத்து, சிறுவாணியிலேயும் கையை வக்கிறாங்கன்னா இதைவிடக் கேவலம் வேறென்னங்க வேணும்? இப்பவும் நாம விழிச்சுக்கலேன்னா... கூடிய சீக்கிரமே சங்குதான்!" என்று பொங்குகிறார்கள் தமிழக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்.

'உலகின் இரண்டாவது தூய்மையான குடிநீர்' என்ற பட்டம் பெற்று, தமிழகத்துக்கு உலகப் பெருமையைப் தேடித் தந்தது சிறுவாணி நீர். கோவையிலிருந்து நாற்பது கி.மீ. தொலைவில் வனப்பகுதிக்குள் சிறுவாணி அணை அமைந்துள்ளது. அணை அமைந்திருக்கும் பகுதி கேரளாவுக்குள் வருகிறது. தூய்மை மற்றும் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு, சிறுவாணி அணைக்குச் செல்ல சுற்றுலாப் பயணிகளுக்கு இரண்டு அரசுகளுமே அனுமதி மறுத்திருந்தன. இந்நிலையில், கேரள மாநில சுற்றுலா வளர்ச்சித் துறையும் வனத்துறையும் இணைந்து 'சிறுவாணி-சைலன்ட்வேலி எக்கோ டூரிஸம்' என்ற சுற்றுலாத் திட்டத்தை சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. கேரள மாநிலம் மன்னார்காட்டில் உள்ள முத்திகுளம் செக்போஸ்டில் இதற்கான டிக்கெட்டுகள் கிடைக்கும். இந்தத் திட்டத்துக்காக மூன்று மினி பஸ்கள் மற்றும் இரண்டு ஜீப்களைக் களமிறக்கியுள்ளது கேரள அரசு.



எக்கோ டூரிஸத்துக்கு கொடி அசைப்பு...

இந்தத் திட்டத்தை எதிர்த்துத்தான் தமிழகத்திலிருந்து கண்டனக் குரல் கிளம்பியிருக்கிறது. கோவையைச் சேர்ந்த பசுமைப் போராளியான யோகநாதன் நம்மிடம்,

"சிறுவாணி அணை இருக்குற பகுதி கேரளாவுக்கு சொந்தமானதுன்னாலும், அந்த தண்ணீர் தமிழகத் தோடது. தமிழக வனப்பகுதியிலுள்ள மலைகளிலிருந்து வழியுற நீர்தான் அந்த அணையில சேமிச்சு வைக்கப்படுது. இந்தக் குடிநீரை உயிர் நீரா நம்பி தமிழ்நாட்டுல லட்சக் கணக்கான மனுஷங்க இருக்காங்க. விளைநிலங்களும் இருக்குது. இந்த நிலையில... இந்த சுற்றுலாத் திட்டத்தைக் கேரள அரசு ஆரம்பிச்சது மகா மோசமான விஷயம். சுத்திப் பார்க்க வர்றவங்க வீசி எறியுற பாட்டில்கள், பாலிதீன் பைகள், உணவுப் பொருட்களால அந்த தண்ணீரோட தரம் கொஞ்சம் கொஞ்சமா குறைஞ்சு சீக்கிரமே நாசமாகிப் போகும்.



பினாய் விஸ்வம்

ஏற்கெனவே ஊட்டியில உள்ள ஏரிகள் இப்படித்தான் சீர்கெட்டுக் கிடக்குது. நெல்லையிலுள்ள மணிமுத்தாறு, பாபநாசம் அணைகளும் சுற்றுலாப் பயணிகளோட கைங்கர்யத்தால கேடுகெட்டுக் கிடக்குது. தாமிரபரணியாறு இன்னிக்குத் தரங் கெட்டுப் போனதுக்கு இந்த மாதிரி நடவடிக்கைகள்தானே காரணம்?

சிறுவாணி அணையை மட்டுமில்லாம, அதையொட்டி இருக்கற பகுதிகளையும் காண்பிக்கறதுக்காக தமிழக எல்லை வரை சுமார் பத்து கிலோமீட்டருக்கு சுத்தி வருவாங்களாம். இந்தப் பகுதிகளெல்லாம் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள். எந்தத் தொல்லையும் இல்லாம வன விலங்குகள் வளையவரும் இந்தப் பகுதியில குறுக்கும் நெடுக்குமா சுற்றுலா வாகனங்கள் ஓட ஆரம்பிச்சா என்ன வாகும்? சுற்றுலா வர்றவங்க தண்ணியடிச்சுட்டு அட்டூழியம் பண்ணுவாங்க... தம்மடிச்சுட்டு சிகரெட்டைத் தூக்கி வீசுவாங்க. அதனால, தமிழகத்துக்குக் கேடு விளைவிக்கிற இத்திட்டத்தைக் கேரள அரசு உடனடியா நிறுத்தியாகணும்!" என்றார்.

"இரண்டு மாநிலங்களுக்கும் சொந்தமான வனப் பகுதியில் இப்படியொரு திட்டத்தை அறிவிக்கும் முன் தமிழக அரசிடம் கலந்து பேசியதா கேரள அரசு? அப்படிப் பேசியிருந்தால், இதைத் தடுக்க தமிழக அரசு முயலாதது ஏன்? கேரள அரசின் இந்தப் போக்கு தொடர்ந்தால், எதிர் நடவடிக்கையாக சிறுவாணி அணைக்கு அருகில் இருக்கும் தமிழக செக்போஸ்ட்டுகளை சீல் வைக்க வேண்டும்!" என்றும் இயற்கை ஆர்வலர்கள் குரல் கொடுக்கின்றனர். பெரியார் திராவிடர் கழகத்தினரும் இந்த விவகாரத்தைக் கையில் எடுத்துப் போராடத் தயாராகிவருகிறார்கள்.

இந்நிலையில், கோவை மாவட்ட வன அலுவலர் அன்வர்தீனிடம் பேசியபோது, "வனவளம் குறையாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு இரண்டு மாநில வனத்துறைக்கும் இருக்கிறது. கேரள அரசு தன் சுற்றுலா வளர்ச்சியின் ஒரு நிலையாக இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இந்த விஷயம் தெரிந்ததுமே நான் அவர்களிடம் சிறுவாணி நீர் பாதுகாப்பு பற்றிப் பேசினேன். 'தண்ணீருக்கு எந்தப் பாதிப்பும் வராது'னு உறுதி கொடுத்திருக்காங்க. அடுத்த மாநில அரசின் உள் விவகாரங்களில் தலையிட நமக்கு உரிமை இல்லை. அதே நேரத்தில் யாருக்காகவும் நம்முடைய வன வளத்துக்கு சின்னத் தீமை ஏற்படவும் விடமாட்டோம்!" என்றார்.



அன்வர்தீன்



யோகநாதன்

கேரள வனத் துறை அமைச்சர் பினாய் விஸ்வத்திடம் கேட்டபோது, "ஒரு குறிப்பிட்ட தூரத்துக்குப் பிறகு தனியார் வாகனங்களை அனுமதிக்கப் போவதில்லை. சுற்றுலாப் பயணிகள் வனத்துறை ஏற்பாடு செய்துள்ள வாகனங்களில்தான் வந்தாகவேண்டும். அவர்களே உணவு மற்றும் குடிநீர் கொண்டுவர அனுமதியில்லை. அதையும் நாங்கள்தான் சப்ளை செய்கிறோம். மது அருந்த அனுமதி கிடையாது. முழுக்க முழுக்க இது ஒரு எக்கோ டூரிஸம்தான். அதனால் யாருக்கும் எந்த பயமும் வேண்டாம். சிறுவாணி நீரின் அருமை பெருமை எங்களுக்கும் தெரியும்!" என்றார் அழுத்தமாக.

என்னதான் கேரள அரசு சமாளிப்பு பதில்களைச் சொன்னாலும், தமிழக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இந்த விவகாரத்தைச் சும்மா விடுவதாக இல்லை. இத்திட்டத்தை நிறுத்தும் வரையில் போராட்டம், ஆர்ப்பாட்டம் என்று நடத்தத் தயாராகி வருகிறார்கள்.

- எஸ்.ஷக்தி

படங்கள்: வி.ராஜேஷ், தி.விஜய்



சிறுவாணி அணை

### தகிடுதண்டா



கருத்து: வேல்ஸ் ஓவியம்: முத்து